மின்சாரத் துறையைக் கொள்ளை இலாபம் ஈட்டும் வேட்டைக்காடாக மாற்றுகின்ற இந்தியாவின் திட்டத்தில் ஒரு பகுதிதான் கூடங்குளம் அணு உலை. 'பன்னாட்டுப் பெரு நிறுனங்களின் இலாபத்திற்காக நமக்கு மட்டும் மின்வெட்டு, தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களின் இலாபத்திற்காக மின்கட்டண உயர்வு' என்று வெளிநாட்டு, இந்தியப் பெரு முதலாளிகளின் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இந்திய அரசின் மின்சாரக் கொள்கைக்கும் வளர்ச்சிக் கொள்கைக்கும் எதிரான போராட்டத்தைத் தான் இடிந்த கரையில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது வெறும் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் மட்டுமல்ல! ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் வளத்தையும், வாழ்வாதாரத்தையும், உரிமையையும் பாதுகாக்கும் போராட்டம்! இந்திய அரசின் கொலைகார வளர்ச்சிக் கொள்கைக்கு எதிரான போராட்டம்.

**விழித்துக் கொண்டவர்கள் போராடுகின்றார்கள்!**

**நாமும் விழித்துக் கொள்வோம்!**

**அப்போதுதான் பிழைத்துக் கொள்ள முடியும்!**

## மத்திய அரசே!

- கூடங்குளம், கல்பாக்கம் அணு உலைகளை அகற்றிடு!
- அணு உலை வணிகக் கொள்ளையர்களுக்காக சொந்த நாட்டு மக்களைப் பலியிடாதே!
- மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்வு உரிமையை மாநில அரசிடமே விட்டு விடு!

## தமிழக அரசே!

- 144 தடை உத்தரவை திரும்பப் பெறு! போராட்டக் குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்து!
- போராடும் மக்கள் மற்றும் போராட்ட குழுவினர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை திரும்பபெறு!
- தோழர்கள் சதீஷ், முகிலனை உடனடியாக விடுதலை செய்!
- தனியார் மின் உற்பத்தி நிலையங்களை அரசுடமையாக்கிடு! மின்சாரக் கட்டணத்தைக் குறைத்திடு!
- உள்நாட்டு சிறுகுறு தொழில், விவசாயம் மற்றும் வீட்டுக்கு தங்குதடையற்ற மின்சாரம் மானிய விலையில் கொடு!


**கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு**

**தொடர்பு : 9443079552**

# கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம்
# நமது போராட்டமே!

## இடிந்தகரையில் போராடும் மக்கள் மீதான அரசின், காவல்துறையின் ஒடுக்குமுறைகளைக் கண்டித்து

# பொதுக் கூட்டம்

நாள்:

**மே 15, 2012**

**செவ்வாய்கிழமை மாலை 5 மணி**

இடம்:

**குறத் தெரு, உறையூர், திருச்சி.**

கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு

**தொடர்பு : 9443079552**

## தலைமை

தோழர் மீ.த. பாண்டியன்

இந்தியப் பொதுவுடைமை கட்சி (மா–லெ), மக்கள் விடுதலை

## வரவேற்புரை

வழக்குரைஞர் ஜோ.கென்னடி

## முன்னிலை

தோழர் திருநாவுக்கரசு
தாளாண்மை உழவர் இயக்கம்

தோழர் செந்தில்
சேவ் தமிழ்ஸ்

தோழர் பி.டி. சண்முகசுந்தரம்
சி.பி.ஐ. (மா.லெ)

தோழர் செல்வமணியன்
தமிழ்நாடு பொதுவுடைமை கட்சி.

தோழர் தமிழழகன்
மக்கள் விடுதலை முன்னணி

தோழர் கண. குறிஞ்சி
மக்கள் சிவில் உரிமைக் கழகம் (பி.யூ.சி.எல்.)

தோழர் இராமலிங்கம்
அயோத்திதாசர் ஆய்வு நடுவம்

தோழர் கமருதீன்
வழக்குரைஞர்

தோழர் அரிமா தோழன்
இந்திய மக்கள் சுதேசி இயக்கம்.

தோழர் லேனா குமார்
மே 17 இயக்கம்

தோழர் தமிழ் வேங்கை
உலகத் தமிழர் பேரமைப்பு

காலன்துரை
புரட்சிகர மக்கள் மக்கள் பாசறை

## சிறப்புரை

தோழர் கொளத்தூர் மணி, பெரியார் திராவிடர் கழகம்

தோழர் பெ.மணியரசன், தமிழ்த் தேசப் பொதுவுடைமை கட்சி

வழக்குரைஞர் சிவசுப்ரமணியன், அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம்

தோழர் கு.இராமகிருட்டிணன், பெரியார் திராவிடர் கழகம்.

தோழர் வன்னிஅரசு, விடுதலைச் சிறுத்தைகள்

தோழர் அரங்க. குணசேகரன், தமிழக மக்கள் புரட்சிக் கழகம்

தோழர் பூ.சந்திரபோசு, தியாகி இமானுவேல் பேரவை,

தோழர் ஆ. நாகராசன், ஆதித் தமிழர் பேரவை,

பேராசிரியர் பாத்திமா பாபு, வீராங்கனைப் பெண்கள் இயக்கம்

தோழர் ரஜினிகாந்த், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி,

தோழர் செரீஃப், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி

தோழர் **பாக்கர்**, இந்திய தவ்ஹீத் ஜமாத்.

வழக்கறிஞர் **பானுமதி**, மக்கள் உரிமைப் பேரவை-தமிழ்நாடு

தோழர் **மதுரை மைதீன் உலவி**, மனிதநேய மக்கள் கட்சி

தோழர் **அனவரதன்**, SUCI (கம்யூனிஸ்ட்)

தோழர் **கிறிஸ்டினா**, பெண்கள் முன்னணி

தோழர் **பழனியம்மாள்**, மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்கம்

தோழர் **அருண்சோரி**, தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறை

தோழர் **நிலவழகன்**, த.ஒ.வி.இ.

தோழர் **கே. சையது இப்ராகிம்**, இந்திய சமூக ஜனநாயகக் கட்சி (எஸ்.டி.பி.ஐ.)

தோழர் **செங்கோட்டையன்**, தலித் விடுதலைக் கட்சி

தோழர் **தமிழேந்தி**, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமை கட்சி

தோழர் **குடந்தை அரசன்**, விடுதலை தமிழ்ப் புலிகள்

தோழர் **நாகை திருவள்ளுவன்**, தமிழ்ப் புலிகள்

தோழர் **சிவ.காளிதாசன்**, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

## நன்றியுரை

**அ.க. தமிழாதன்,** விடுதலை சிறுத்தைகள் கட்சி.

---

கடந்த மே 1 ஆம் தேதி முதல் இடிந்தகரையில் காலவரையற்றப் பட்டினிப் போராட்டம் நடந்து வருகின்றது. இந்த போராட்டத்தை அலட்சியப்படுத்துவதோடு சேர்த்து இடிந்தகரை வரை அரசு ஊரடங்கு உத்தரவை விரிவாக்கியுள்ளது; காவல் துறையினரை குவித்துள்ளது. அமைதிப் போராட்டத்தை வன்முறையால் நசுக்கப் பார்க்கின்றது அரசு. தமிழக அரசு இப்போக்கை கைவிட்டு இடிந்தகரைக்குள் அமல்படுத்தப்பட்டுள்ள 144 தடை உத்தரவை நீக்க வேண்டும். போராடும் மக்களின் கோரிக்கைகளை ஏற்று பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துவோம்.

**இடிந்தகரையில் போராடும் மக்கள் தனித்துவிடப் படவில்லை என்று உணர்த்த...**

**கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டின் போராட்டம் என்று உரக்கச் சொல்ல..**

# திருச்சியை நோக்கித் திரள்வோம்!